பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 02 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு நரேந்திர மோடி, பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணைய வழிக் கருத்தரங்கில் இன்று உரையாற்றுகிறார்.

**2.** சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

**3.** மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

**4.** தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

**5.** உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **72** ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, பட்ஜெட்டுக்குப் பிந்தைய முதலாவது இணைய வழிக் கருத்தரங்கில் இன்று உரையாற்றுகிறார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொழில்நுட்பங்கள், சீர்திருத்தம் மற்றும் நிதி என்ற தலைப்பில் இன்றைய கருத்தரங்கம் நடைபெறுகிறது.

இதில் முதலீடு, உள்கட்டமைப்பு, வங்கித் துறை சீர்திருத்தங்கள் மற்றும் வரி சீர்திருத்தங்கள் குறித்து விவாதங்கள் நடைபெறும்.

துறை சார்ந்த பல்வேறு தரப்பினரின் அனுபவங்களின் அடிப்படையில் பட்ஜெட் அறிவிப்புகளை திறம்பட செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் சேலத்தில் உள்ள கைத்தறித் தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய வளாகத்தை இன்று திறந்து வைக்கிறார்.

குடியரசு துணைத்தலைவரின் வருகையை ஒட்டி சேலத்தில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Vijayakumar - 64 Sec)**

<<<<>>>>

சிறு, குறு, நடுத்திர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

கோவையில் தொழில்துறையினருடன் கலந்துரையாடிய அவர், நாட்டில் உற்பத்தி துறையில் **36** சதவீத பங்கையும், ஏற்றுமதி துறையில் **46** சதவீத பங்கையும் சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் வழங்கி வருவதாகத் தெரிவித்தார்.

கோவையில் உள்ள தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான சர்வதேச சந்தை வாய்ப்பை மேலும் அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த தொழில்துறையினரின் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. ஜிதன்ராம் மாஞ்சி உறுதியளித்தார்.

<<<<>>>>

நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

டிஜிட்டல் நாணய அடிப்படையிலான பொது விநியோக மானிய திட்டத்தை புதுச்சேரியில் நேற்று அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

கடந்த 11 ஆண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திட்டங்களின் பலன்கள் பயனாளிகளுக்கு முழுமையாக சென்றடைவதை அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இலவச உணவு தானிய திட்டம் 80 கோடி மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் நாணய அடிப்படையிலான பொது விநியோக திட்டம், அகமதாபாதை தொடர்ந்து புதுச்சேரியில் தொடங்கப்பட்டுள்ளதாகவும்,

விரைவில் நாடு முழுவதும் இது விரிவாக்கம் செய்யப்படும் என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** தலைமையிலான தேர்தல் ஆணைய குழுவினர் சென்னையில் இன்று இரண்டாவது நாளாக ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் செய்தியாளர்களை சந்தித்து தேர்தல் ஏற்பாடுகள் குறித்து விளக்கமளிக்க உள்ளார்.

<<<<>>>>

போக்குவரத்துத் துறையில் புதிய திட்டப் பணிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் தொடங்கி வைத்தார்.

**145** புதிய மின்சார பேருந்துகளின் சேவையை தொடங்கி வைத்த அவர், அரசு விரைவுப் போக்குவரத் கழகத்திற்கான **49** அதிநவீன சொகுசுப் பேருந்துகளின் சேவையையும் தொடங்கி வைத்தார்.

சுமார் **52** கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மின்சார பேருந்து பணிமனையையும் திரு. உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

பல்லாவரத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், குற்றங்கள் அதிகரித்துள்ளதற்கு போதைப்பொருள் புழக்கமே காரணம் என்று கூறினார்.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் அனைத்து துறைகளிலும் முறைகேடுகள் அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கும்பகோணத்தில் அரசுப் பள்ளியில் நடைபெற்ற சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூகத்தில் நலிவடைந்த மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க மாநில அரசு தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்று விளம்பரங்களை வெளியிடுவதில் மட்டுமே திமுக அரசு கவனம் செலுத்தி வருவதாகவும், பெண்களுக்கு உண்மையான பாதுகாப்பை வழங்கவில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களிலும், தென் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்றிரவு பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஜெனீவாவில் நடைபெற்ற அமெரிக்காவுடனான மூன்றாவது சுற்று அணுசக்திப் பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக ஈரான் கூறியுள்ளது.

--------------

பாதுகாப்புத்துறை வல்லுநரும் பத்திரிகையாளருமான மரூஃப் ரஸா-வின் மறைவுக்குப் பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

--------------

இந்தியா வந்துள்ள அமெரிக்க வர்த்தக அமைச்சர் திரு. ஹோவார்ட் லுட்னிக்குடன் மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் பேச்சு நடத்தினார்.

--------------

இந்தியா - கென்யா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு குழுவின் 3 நாள் கூட்டம் நைரோபியில் நேற்று நிறைவடைந்தது.

--------------

இந்தியா - நோபாள ராணுவ தளபதிகள் மாநாடு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

--------------

நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலான ஐஎன்எஸ் அஞ்சாதீப்-பை கடற்படையில் இணைக்கும் நிகழ்ச்சி சென்னையில் இன்று நடைபெறுகிறது.

--------------

தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி இன்று பங்கேற்று மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்குகிறார்.

--------------

நிலத்தகராறில் விவசாயி ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் திமுக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கமலக்கண்ணன் உள்ளிட்ட 7 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

--------------

சென்னையை இசை நகரமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளதைக் கொண்டாடும் வகையில் மெரினா கடற்கரை மற்றும் வள்ளுவர் கோட்டத்தில் நாளையும், நாளை மறுநாளும் மாலையில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக கலைப் பண்பாட்டுத் துறை அறிவித்துள்ளது.

--------------

சென்னை திருவிக நகர் மண்டலத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாநில அமைச்சர் திரு சேகர் பாபு ஆய்வு செய்தார்.

--------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 72 ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 256 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக அபிஷேக் ஷர்மா 55 ரன் எடுத்தார்.

257 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த ஜிம்பாப்வே 6 விக்கெட் இழப்புக்கு 184 ரன் மட்டுமே எடுத்தது.

அர்ஷ்தீப் சிங் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

--------------

குருகிராமில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sravya Shivani - ஜப்பானின் Michika Ozeki இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**